Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 34

சனிக்கிழமை
30 டிசெம்பர் 2023

மார்கழி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"அப்ப 'குடிமக்கள்' பாடும் இனிமேல் திண்டாட்டம் எண்டு சொல்லுங்கோ"

யாழில் டெங்கு தாண்டவம்

# கட்டுப்பாடுகளைத் தளர்த்தி புகை விசுறுவதற்கு முடிவு

## இன்றுமுதல் நடவடிக்கை ஆரம்பம்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 30**

**யாழ்ப்பாணத்தில் டெங்குத்தாக்கம் தீவிரமடைந்துள்ள நிலையில் புகைவிசிறுவதற்காக தேசிய டெங்குக்கட்டுப்பாட்டுச் செயலணியால் இதுவரையிலிருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.**

11

சட்டவிரோத மீன்பிடி:

## 2013 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.71 இலட்சம் தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 30
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோத மீன்பிடிக்காக 387 மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவர்களுக்கு

11

## உயர்தர வகுப்புக்கு நேற்றுமுதல் தடை!

கொழும்பு, டிசெ. 30
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளை நடத்தவும், பரீட்சைக்கான பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பான இதர செயற்பாடு

11

## வற்வரி அதிகரித்தால் பாண் விலை உயரும்!

யாழ்ப்பாணம், டிசெ. 30
அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள வற்வரி அதிகரிப்புக் காரணமாக இலங்கையில் பாணின் விலைகூட அதிகரிக்கும். இதனால் நாட்டில் வறுமை தலைவிரித்தாடும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்.

11

## சாராய விலையும் 90 ரூபா எகிறும்!

கொழும்பு, டிசெ. 30
'வற்' வரி அதிகரிப்பின் காரணமாக, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சாராயத்தின் விலையும் அதிகரிக்கப்படவுள்ளது.
இதன்படி ஒரு போத்தல் சாராயத்தின் விலை 90 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக சாராய உற்பத்தி நிறு

11

வற்வரி அதிகரித்தால்

## பாடசாலை சேவைகளின் கட்டணமும் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், டிசெ. 30
2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து வற் வரி அதிகரிக்கின்றமையால், பாடசாலை போக்குவரத்துச் சேவைக்கான கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைச் சேவை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இந்த விடயத்தைத் தெரிவித்தனர்.
20 வீதத்துக்கும் மேல் டீசலின் விலையை

11

டெங்கு கோரப்பிடி!

## 88,000 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 30
நாட்டில் டெங்குத் தொற்று தீவிரமாகப் பரவிவரும் நிலையில், இந்த வருடம் இதுவரை சுமார் 88 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 55 பேர் உயிரிழந்துள்ளனர்.
இந்த மாதத்தில் மட்டும் 10 ஆயிரத்து 500 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.
நாட்டில் இதுவரை மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 18 ஆயிரத்து 309 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 15 ஆயிரத்து 995 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 9 ஆயிரத்து 48 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலும் டெங்கு தீவிரமாகப் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

அரசாங்கம் மாறினாலும்

## ஐ.எம்.எப். திட்டம் தொடரவேண்டும்

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 30
இலங்கையில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், அடுத்த நான்கு வருடங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் தொடர வேண்டும் என்ற மத்திய வங்கியின்

11

வடமராட்சியில்

## படகுகள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், டிசெ. 30
யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர்கள் சங்கத்துக்கு உட்பட்ட இரண்டு மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள் மற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் என்பன விஷமிகளால் நேற்று பின்னிரவு எரியூட்டப்பட்டுள்ளன.
கேவில், பாலையடி மேற்குக் களப்புப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மருதங்

11

இலங்கையிலிருந்து

## மூன்று துறைமுகங்கள் ஊடாக இந்தியாவுக்கு கப்பல் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 30
இலங்கையிலிருந்து காங்கேசன்துறை, தலைமன்னார், திருகோணமலை ஆகிய மூன்று துறைமுகங்களில் இருந்தும் இந்தியாவுக்குக் கப்பல் சேவையை நடத்துவதே இந்தியாவின் விருப்பம் என்று இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் ஜா தெரிவித்துள்ளார்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் 2024

## சூடுபிடிக்கும் அரசியல் களம்

**கொழும்பு, டிசெ. 30**

**2024 ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் ஆண்டாக அமையவுள்ளது. இந்தப் பலப் பரீட்சைகளை எதிர்கொள்ள கட்சிகள் முழுவீச்சுடன் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை இழந்து தவிக்கும் ஆளுங்கூட்டணியில் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன கட்சி, தனது வாக்குவங்கி சரிந்துள்ள நிலையில் மக்கள் மத்தியில் தமது இருப்பைத் தக்கவைக்க எல்லா வழிகளிலும் போராடிவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியும் கடந்த பொதுத்தேர்தலில் படுதோல்வி அடைந்தது. அடுத்த தேர்தல்களை இலக்குவைத்து இந்தக் கட்சிக்குள் தற்போது மறுசீரமைப்புகள் இடம்பெற்றுள்ளன. 2024 இல் நடைபெறும் தேர்தல்களில் வெற்றிபெற்றாலே ஐ.தே.க.வின் அரசியல் பயணம் தொடரும்.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவிதியையும் 2024 தான் நிர்ணயிக்கவுள்ளது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, மத்தியிலும் ஆட்சியைப் பிடிக்கப் போராடிவருகிறது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை திரட்டி பிரமாண்ட கூட்டணியை அமைத்துள்ளது. 2024 இல் நடைபெறும் தேர்தல்களில் அந்தக் கட்சி வெற்றிநடைபோடத் தவறின் அந்தக் கட்சியும் அந்தஸ்தை இழக்கும். தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவி தொடர்பில் 2024 இல் தான் முடிவெடுக்கப்படவுள்ளது. (ச-44)



## முல்லைக் குளங்களின் புனரமைப்பு ஆரம்பம்

முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கற்சிலைமடு மற்றும் சின்னக்குளம் ஆகிய குளங்களின் புனர்நிர்மாணப் பணிகள் உலக வங்கியின் 63 ஆயிரத்து 707 மில்லியன் ரூபா நிதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் இந்தக் குளங்களினூடாக நீரைச் சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டு தொடர் மழையால் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-500)

## புதிய அரசியல் கட்சி தொடங்கும் மேர்வின்

கொழும்பு, டிசெ. 30

புதிய அரசியல் கட்சியொன்றை ஓரிரு நாள்களில் ஆரம்பிக்கவுள்ளேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டை ஸ்தம்பிக்க வைக்கும் இந்த அரசாங்கம் விரட்டியடிக்கப்படவேண்டும்.

பொலிஸார் அரசியல் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முற்படக்கூடாது. இந்த அரசை விரட்டுவதற்கான போராட்டத்துக்குத் தலைமை வகிப்பதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் - என்றார். (ச-44)



## 80 லட்சம் முட்டைகள் சதொசவுக்கு


கொழும்பு, டிசெ. 30

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 80 இலட்சம் முட்டைகள் லங்கா சதொச நிறுவனத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

சதொசவுக்கு நாளாந்தம் வெளியிடப்படும் 10 இலட்சம் முட்டைகளின் தொகையானது நாளை வரை நாளொன்றுக்கு 20 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் [illegible] (ச-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு
08 . 10 . 1942



இறப்பு
23 . 12 . 2013

## கந்தையா பரமேஸ்வரன்
(S.L.A.S)

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடாகவும், கொழும்பு மற்றும் Cambridge, UK ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமேஸ்வரன் அவர்கள் கடந்த (23.12.2023) சனிக்கிழமை அன்று Cambridge, UK இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமலர் அவர்களின் அன்புக் கணவரும், லோஜினி, சிவரூபன், சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரவிந்தன், சிந்துஜா, குமுதா ஆகியோரின் மாமனாரும், ஆதேவிஷ், நித்தேஷ், அபிநாத், அபிசயன், அபிசரண், அகின், லித்திகா ஆகியோரின் அன்புப் பேரனும், வரபிரகாசம் (யாழ். இந்துக்கல்லூரி - ஓய்வுநிலை ஆசிரியர் - கனடா), காலஞ்சென்ற பரமசிவம் ராஜராஜேஸ்வரி (ஜேர்மனி), நாகேஸ்வரி (கந்தர்மடம்), சிவராசா (யாழ். அளவெட்டி அருணோதயா கல்லூரி - ஓய்வுநிலை ஆசிரியர் - உரும்பிராய்), சிவானந்தன் (Registered Licenced Surveyour - உரும்பிராய்), பரமேஸ்வரி (கந்தர்மடம்) ஆகியோரின் சகோதரனும், பத்மலோயினி (கனடா), சிவபாதம் (ஜேர்மனி), லோகநாதன் (காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஓய்வுநிலை உத்தியோகத்தர் - கந்தர்மடம்), ரஞ்சினி (உரும்பிராய்), சிறிரஞ்சன் (இந்தியா) காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசரெட்ணம், சோதிலிங்கம், தெய்வநாயகி மற்றும் குணசேகரம் (காங்கேசன்துறை லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம் - ஓய்வுநிலை உத்தியோகத்தர் - தையிட்டி) ஆகியோரின் மைத்துனரும், நீலாம்பிகை, தெய்வநாயகி, சிவகுமாரி, காலஞ்சென்றவர்களான பரமன், இலங்கைநாயகி ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னார் ஓய்வுபெற்ற உயர் அதிகாரி - இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S) முன்னாள் மாவட்ட மேலாளர் ஐக்கிய நாடுகள், மாவட்ட முகாமையாளர் - UN - Habitet, முன்னாள் செயலாளர் - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, முன்னாள் செயலாளர் - இலங்கை வடக்கு, கிழக்கு கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு, முன்னாள் பதிவாளர் யாழ் / பல்கலைக்கழகம், முன்னாள் தலைவர் - யாழ். இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கம் - யாழ்கிளை போன்ற பதவிகளை வகித்தவர்.

இவர் கற்ற ஆரம்பக்கல்வி யா/கந்தர்மடம் சைவ பிராகாச வித்தியாசாலை, உயர்கல்வி யாழ். இந்துக்கல்லூரி (நாடகம், பேச்சு, விளையாட்டு போன்ற பலவற்றிலும் கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர், பட்டப்படிப்பு பேராதனை பல்கலைக்கழகம் - புவியியல்துறை, பேராதனை குறிஞ்சி குமரன் கோவிலை ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவர்.

யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி, பேராதனை பல்கலைக்கழம், வட்டுக்கோட்டை Jaffna College ஆகியவற்றின் விரிவுரையாளர், புத்தளம் சிமெந்து தொழிற்சாலை முகாமையாளர், இலங்கை நிர்வாக சேவையில் மாவட்ட நில அதிகாரி கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ACLG மன்னார், மேலதிக அரசாங்க அதிபர் - மட்டக்களப்பு, அரசாங்க அதிபர்-அம்பாறை, செயலாளர் - வடக்கு - கிழக்கு மாகாணம் கல்வித்திணைக்களம், செயலாளர் - இந்துசமய விவாகார அலுவலர்கள் அமைச்சு.

அன்னாரின் காலஞ்சென்ற தந்தை கந்தையா நல்லூர் முருகனை தோழில் சுமந்து செய்த தொண்டினை பள்ளிப்பராயம் முதல் தானும் சகோதரர்களும் இணைந்து இன்று வரை செய்ததன் பயனால் வைகுந்த ஏகாதசி தினமான அன்று சொர்க்கவாசல் திறந்திருக்க நம்மைவிட்டு பிரிந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Cambridge UK என்னும் இடத்தில் UK நேரப்படி நாளை (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை 2 pm - 4 pm (இலங்கை நேரப்டி 7.30 - 9.30 நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரர்கள், குடும்பத்தினர்,**
**சிவானந்தன்**
**(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)**
**077 634 1541**

**பலாலி றோட்,**
**உரும்பிராய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புகளை விரட்ட புகையூட்டல் ஆரம்பம்

## மாநகரசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

**நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த முன்னெடுக்கப்படும் புகையூட்டும் செயற்பாட்டுக்கு மருந் துகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத னையடுத்து புகையூட்டும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.**

கடந்த காலங்களில் புகையூட்டலுக்கான மருந்துகள் கிடைக்கப்பெறாமையால் அவற்றுக்குப் பற்றாக்குறை யும் தட்டுப்பாடும் நிலவியது. அதனால் புகையூட்டும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் புகையூட்டலுக்கான குறிப்பிட்டளவு மருந்துகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள் ளன.

அதனையடுத்து டெங்குத் தாக்கம் கூடுதலாகக் காணப்படும் பிரதேசங்கள் மற்றும் மருத்துவமனை வளாகங்களில் புகையூட்டல் செயற்பாடு முன்னெடுக் கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)




## டெங்கு பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வட்டுக்கோட்டை, அத்தியடிப் பிள்ளையார் ஆலயத் துக்கு அருகாமையில், வீதியோரத்தில் கொட்டப்பட் டுள்ள பொருள்களால் டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது.

பொறுப்பற்ற செயற்பாடுகளால் சூழல் மாசடைவது டன் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படுகிறது. டெங்கு அபாயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோ கத்தர்கள் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித் துள்ள நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மூன்று உயிரிழப்புகள் டெங்குத் தொற்றினால் சம்ப வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-27)



## டெங்கு விழிப்புணர்வு

சண்டிலிப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான டெங்கு விழிப்புணர்வுக் கூட்டம், கிராம அலுவலர் பணிமனையில் கடந்த புதன்கிழமை நடை பெற்றது. தொடர்ந்து வீடு வீடாக டெங்கு களத் தரிசிப் பும், சிரமதானமும் நடைபெற்றது. (ரி-66)

## டெங்கைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 30

டெங்கு நோய் நிலைமையைக் கட்டுப் படுத்த அயல் மாவட்டங்களிலிருந் தும் யாழ்ப்பாணத்துக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மேலதிக மாக வரவழைக்க நடவடிக்கை எடுக் கவுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையில் அதிகளவான நோயாளர் கள் இருப்பதால் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ளவர்கள் அக்கறையு டன் இருக்கவேண்டும்.

நோய் நிலைமையைக் கட்டுப்படுத்த மேலதிகமாக அயல் மாவட்டங்களிலி ருந்தும் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது.

இதேவேளை - தற்போது பரவியுள்ள டெங்குத் தொற்றானது மூன்றாவது வகை நுளம்பின் மூலமே பரவுவதாக வும் இது இம்முறையே யாழ்ப்பாணத் தில் பரவியுள்ளதால் மக்கள் மத்தி யில் இதற்கான தற்காப்பு வளங்கள் இல்லாதுள்ளதாகவும் சுட்டிக்காட்டி னார். (ஓ-125)

## ஒன்றிணைந்த டெங்கு ஒழிப்பு

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங் களில் டெங்கு பரவும் அபாயமுள்ள இடங் களில் ஒன்றிணைந்த கழிவுகள் அகற் றும் பணிகள் இன்று சனிக்கிழமை நடை பெறும் என்று மாநகர சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி ஜே/82, ஜே/80, ஜே/74, ஜே/76, ஜே/68, ஜே/69, ஜே/66, ஜே/65, ஜே/98, ஜே/99, ஜே/109, ஜே/ 108, ஜே/88, ஜே/84, ஜே/91, ஜே/95 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே இந்த டெங்கு ஒழிப்புப் பணிகள் முன்னெ டுக்கப்படவுள்ளன. (ச-17)

## மாதுளை, இளநீருக்கு கிராக்கி

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீர் மற்றும் மாதுளம்பழம் போன்றவற்றுக்கான நுகர்வு அதிகரித்ததனால் அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சீரற்ற காலநிலையால் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு மற்றும் காய்ச்சல் உள்ளிட்ட நோய்களால் பீடிக் கப்படுவோர் இவற்றை அதிகளவில் நுகர் வதனால் அவற்றுக்கு கிராக்கி ஏற்பட்டுள் ளது. செவ்விளநீர் ஒன்று 180 ரூபாவாகவும் மாதுளம்பழம் ஒன்று 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

## புதினம் தெரியுமோ?

**குரு** தட்சிணையள் கனவிதம். தனக்கு நேர டியா வில்வித்தையைப் படிப்பிக்காத துரோணர் கேட்டதுக்காக, தன்ர கட்டை விரலையே குடுத்தவன் ஏகலைவன். ஆனால் அப்ப காசு வாங்கிக்கொண்டு ஆரும் படிப்பிக்கிறேலை. அதால தான் குருதட்சி ணையா கடைசியா பெரிசா ஏதும் குடுக்கிறவை. இப் பதான் எல்லாருக்கும் அரசாங்கம் சம்பளம் குடுக் குதே. அப்பிடியிருந்தும், படிப்பிக்கிறவைக்கு பிள்ளை களோ அவையின்ர பெற்றாரோ தாங்களா முன் வந்து, தட்சிணையாவோ அன்பளிப்பாவோ ஏதும் குடுக்கிறவைதான். அது அவையவையின்ர விருப் பம். ஆனால் ' நாங்களா மனமுவந்து செய்யிறம்' எண்ட போர்வையில இல்லாதவையிட்டையும் பல வந்தமாக் காசை வாங்கிக் கொண்டு வாத்தியாருக்கு நகை நட்டுப் போடுறதெண்டது பிழைதானே.

வலிகாமத்தில உள்ள பள்ளிக்கூடமொண்டில நடந்த சம்பவம் இது. கிட்டடியில வந்த கொலர்ஷிப் ரிசல்ட்டில அந்தப் பள்ளிக்கூடத்திலதான் வலயத் திலேயே கூடப் பிள்ளையள் பாஸ் பண்ணினதுகள். அப்பிடி கூடப்பிள்ளையள் பாஸ் பண்ணினதுக்கு அவைக்குப் படிப்பிச்ச வாத்தியாருக்கு கௌரவிப்புச் செய்தவை. கொஞ்ச வருசமா கொலர்ஷிப் வகுப்பு களை ஒரு வாத்தியார் தான் அங்க எடுக்கிறார். ஒவ் வொரு வருசமும் பாஸ் பண்ற பிள்ளையள் சார்பில அவருக்கு கௌரவிப்புச் செய்து, அன்பளிப்பா நகை யள் போட்டவையாம். அந்த மரபை இந்தமுறையும் கைவிடாமல் செய்திருக்கினமாம். மாஸ்ரருக்கு நகை செய்யிறதுக்காக, பாஸ்பண்ணின பிள்ளையளின்ர பெற்றோர் ஒவ்வொருத்தரும் பத்தாயிரத்து ஐநூறு ரூபாப்படி குடுக்கோணுமாம். கிட்டத்தட்ட மூண்டரை லட்சம் ரூபாவில நகை செய்து போட்டிருக்கினம். (இவ்வளவு காசுதான் போடோணுமெண்டு 'ஓர்டர்' போடுறது ஆரெண்டதெல்லாம் சிதம்பர இரகசியம்) காசு உள்ளவை பத்தாயிரமில்லை, ஒரு லட்சமும் குடுப்பினம். ஆனால் தாங்கள் கூழோ கஞ்சியோ குடிச்சுக் கொண்டு, கஷ்டத்தின் மத்தியிலும் பிள்ளை யளைப் படிக்க வைக்கிறவை இப்பிடி வாத்தியாருக்கு நகை போட பத்தாயிரம் ரூபா குடு எண்டால் எங்க போவினம்?

என்ன சிக்கல் எண்டால் இந்தப் பிரச்சினையை எங்க போய் முறையிடுறது எண்டதுதான். பள்ளிக் கூடக்காரரிட்ட இதைப்பற்றிக் கேட்டால் 'எங்களுக்கு இதைப்பற்றித் தெரியாது. விழாவை மட்டும் நாங்கள் செய்யிறம். ஆனால் மாஸ்ரருக்கு பேரண்ட்ஸ் அவையா காசு போட்டு, நகை செய்து குடுக்கினம். அதை நாங்கள் எப்பிடித் தடுக்கிறது? எண்டு நைசா நழுவிடுவினம். ஆனால் பள்ளிக்கூடத்துக்குள்ள நடக்கிற விழாவில, ஒவ்வொரு வருசமும் இப்பிடி ஆயிரக்கணக்கில காசு சேர்த்து, பெற்றாரின்ர வயித் தில அடிக்கிறதை ஒரு பள்ளிக்கூடம் அனுமதிக்கிறது சரியோ? அதைவிட ஒரு பிள்ளை கொலர்ஷிப் பாஸ் பண்ணினா, நேர்சரியில இருந்து தரம் அஞ்சு மட்டும் படிப்பிச்ச எல்லாரும் தான் காரணம். ஆனால் கடைசி ஒரு வருசம் மட்டும் படிப்பிச்சவருக்கு நகை போடுறதும், கௌரவிக்கிறதும் எந்தவகையில நியாயம்?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**

*சொன்னது யாரென்று பார்க்காமல், சொல்லப்பட்டது நல்லதா கெட்டதா என்பதை ஆராய்ந்து அதன்படி செயற்படும் கும்பராசி அன்பர்களே…*




இதுவரை உங்களின் ராசிக்கு விரைய ஸ்தானத்தில் அமர்ந்து தேவையற்ற செலவுகளைக் கொடுத்து கடன் சுமையில் ஆழ்த்திய சனிபகவான் தற்போது தங்கள் ராசிக்குள்ளேயே வந்து ஜன்மசனியாக அமர இருக்கிறார். ஜன்மசனி இன்னும் மோசமான பலன்களைத் தருவாரோ என்று கவலை வேண்டாம். சனி பகவான் உங்கள் ராசி நாதன். அவர் உங்கள் ராசியிலேயே ஆட்சிப்பலம் பெற்று அமர்வதால் சுபத்துவமான பலன்களே கிடைக்கும் என்பதால் அச்சம் தேவையில்லை.

பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்து ஏமாந்த பணமெல்லாம் கைக்கு வரும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள். என்றாலும் உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை.

உணவுப் பழக்கங்களை முறைப்படுத்துங்கள். வயிறு தொடர்பான உபாதைகள் அதிகரிக்கும்.

உறவினர்களாலும் செலவுகள் அதிகரிக்கும். அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

சுபகாரியங்கள் கூடிவரும். புதுவீடு மனை வாங்கும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். உரிய கடன் வசதி கிடைக்கும்.

**சனிபகவானின் பார்வைப் பலன்கள்**

சனிபகவான் உங்கள் ராசிக்கு 3,7,10 ஆகிய வீடுகளைப் பார்க்கிறார். மூன்றாம் வீட்டைப் பார்ப்பதால் சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்கும் யோகம் வாய்க்கும். சவால்களில் வெற்றி பெறுவீர்கள்.

**வியாபாரம்:** தொழிலில் மாற்றங்கள் செய்வீர்கள். எந்தச் செயலையும் முன்னெடுக்கவேண்டாம்.

**உத்தியோகம்:** பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்கள் விடுப்பில் செல்வதால் அவர்களின் பணியும் உங்களையே சேரும். சில நேரங்களில் மேலதிகாரிகள் உங்கள் உழைப்பை மதிக்கவில்லையோ என்று வருந்துவீர்கள். என்றாலும் அதிகாரிகள் உங்களை உரிய நேரத்தில் மதித்து கிடைக்கவேண்டிய உயர்வுகளைக் கொடுத்துவிடுவார்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு ஏற்பட்டிருந்த நஷ்டங்களை ஈடுகட்டி எதிர்காலத்துக்கான பலவிதமான வசதிகளையும் உங்கள் உழைப்பின் மூலம் ஏற்படுத்தித் தரும் காலமாக அமையும்.**



## யோகர் சுவாமி கோயிலில் திருவாதிரை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 30

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக் கோவிலில் மார்கழித் திருவாதிரை வழிபாடும் நூல் வெளியீடும் கடந்த புதன்கிழமை யோகர் சுவாமி சமாதிக் கோவில் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது.

இதில் வடமாகாண ரீதியாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட நற்சிந்தனைப் பாடல் குழுப் பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-66-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** நீண்டநாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கியமான தீர்வு காண்பீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். ஆதாயம் பெருகும். சிக்கல்கள் தீரும். வியாபாரம் செழிக்கும்.

**கடகம்:** யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில், வியாபாரத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**சிம்மம்:** கணவன் -மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. வீண்வாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சிலசெலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**துலாம்:** தவறு செய்பவர்களைத் தட்டிக்கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வாகனங்களை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர்ப் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்:** சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். முன்னுரிமை கிடைக்கும். அமோகமான நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாகச் செலவ [illegible]. நட்பால் ஆதாயம் உண்டு.

## குருதிக்கொடை

கிளிநொச்சி, டிசெ. 30

மாந்தை கிழக்குப் பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் அண்மையில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஏனைய அரச திணைக்கள அலுவலர்கள், பாதுகாப்புப் படையணியினர், பொலிஸார், பொது மக்கள் எனப் பலரும் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். (ச-75)

## திருவாசக முற்றோதல்

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ரி-66)

★ ★ ★ ★

கிளிநொச்சி, டிசெ. 30

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவ ஆச்சிரமத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 7மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைத்துச் சிவனடியார்களையும் கலந்து கொள்ளுமாறு மகாதேவ ஆச்சிரம அறங்காவலர் நிர்வாக உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ஒரு தேர்தலும் சில சிக்கல்களும்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறுவது உறுதியாகியுள்ள சூழலில் அது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தமிழர் தரப்பில் அதிகரித்துள்ளன. தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளர் களமிறக்கப்படவேண்டும் என்ற கருத்து அதிகமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதேவேளை தமிழர் தரப்பு தேர்தலைப் புறக்கணிக்கவேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வழமைபோல முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதே நேரத்தில், தமிழர் தரப்பு பொதுவேட்பாளரை நிறுத்துவது என்பதன் பின்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கக்கூடும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல்கள் அல்லது முக்கியமான விவகாரங்கள் தொடர்பில் தமிழ்த் தரப்பின் பிரதான தலைவராக இருக்கும் இரா.சம்பந்தன் நேரகாலத்துடன் முடிவு எடுப்பவர் அல்ல. நேரம் நெருங்கி வரும்போது தான் நினைத்த முடிவுக்கு மற்றவர்களை வரச் செய்வார். அல்லது தனது முடிவைத் திணிப்பார். இதுவே அவரது வழக்கமாக இருந்து வந்தது. இப்போதும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழர் தரப்பு நேர காலத்துடன் முடிவு எடுக்காமல் இருக்கவேண்டும் என்பதும், அதன் ஊடாக தென்னிலங்கை வேட்பாளர்களுடன் பேரம் பேசும் வலுவை அதிகரிக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரே தேர்தல்கள் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகள் சுயாதீனமாக முடிவு எடுத்தன. அதுவரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்குரிய வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தனர். 2010, 2015, 2019 என மூன்று ஜனாதிபதித் தேர்தல்களை தமிழர் தரப்பு எதிர்கொண்டிருக்கின்றது. தமிழர் தரப்பு ஆதரித்த ஜனாதிபதி வேட்பாளர்கள் 2010, 2019 ஆம் ஆண்டுகளில் தோல்வியைச் சந்தித்திருந்தனர். 2015 ஆம் ஆண்டில் மாத்திரமே தமிழர் தரப்பின் ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் வெற்றிபெற முடிந்தது. அந்தத் தேர்தலில் தமிழர் தரப்பு ஆதரித்த மைத்திரிபால சிறிசேனவும், தமிழர் தரப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. 'இதயத்தால் எழுதப்பட்ட ஒப்பந்தம்' என்று மைத்திரிபால - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான ஒப்பந்தத்தை விளித்திருந்தாலும், அவரது நல்லாட்சி அரசில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் இறுதிக் கட்டத்தில் குழப்பப்பட்டிருந்தன.

அதேநேரம் ஜனாதிபதி வேட்பாளர்களான சரத் பொன்சேகா மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரை தமிழர் தரப்பு ஆதரித்திருந்தது. ஆனால் அவர்கள் தேர்தலில் தோற்ற பின்னர் தமிழர் விரோதப்போக்கை வெளிப்படையாகக் காண்பித்திருந்தனர். இவ்வாறானதொரு சூழலில் தென்னிலங்கையில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குபவர் எவராக இருந்தாலும் அவர்கள் பௌத்த - சிங்கள வாக்குகளைத்தான் குறிவைப்பார்கள். தமிழர் தரப்பின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக எத்தனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டாலும் அவை எதுவும் தேர்தல்களின் பின்னர் நிறைவேற்றப்படாது என்பதுதான் கடந்த காலப் பட்டறிவு. நிலைமை இதுவாக இருக்கையில் தென்னிலங்கையுடன் ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்திப் பேரம் பேசுவது என்பதும் சந்தேகம் தான்.

தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளரை களமிறக்குவது என்பதும் அவருக்காக ஒட்டுமொத்த தமிழ் பேசும் சமூகமும் வாக்களிப்பதும் வித்தியாசமான அணுகுமுறைதான். எனினும் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் களமிறங்குவ தென்னிலங்கையில் சிதறியிருக்கும் சிங்களவர்களை ஓரணியில் கொண்டு வருவதற்கும் வாய்ப்பாகிவிடும். தென்னிலங்கை தரப்புடன் பேரம் பேசுவதோ அல்லது தென்னிலங்கைத்தரப்பில் யாராவது ஒருவரை ஆதரிப்பதோ முடியாத காரியம். **மிகச்சிக்கலான இந்த அரசியல்நிலையை தமிழர் தரப்பு எவ்வாறு கையாளப்போகின்றது என்பதில் தான் எமது இனத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.**




## மூடப்பட்ட வழக்குகளை மீளெடுத்து தண்டிப்போம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 30**

**நல்லாட்சிக் காலத்தில் திட்டமிட்ட அடிப்படையில் மூடிமறைக்கப்பட்ட வழக்குகளை மீள விசாரணைக்கு எடுத்து உரியவர்கள் தண்டிக்கப்பட நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சிக் காலத்தில் 'டீல்' காரணமாக மறைக்கப்பட்ட பல வழக்குகள் உள்ளன. இதில் விக்கிரமசிங்க - ராஜபக்சக்களுக்கிடையில் உடன்படிக்கையும் உள்ளது. மறைக்கப்பட்ட அனைத்து வழக்குகளும் மீள விசாரணைக்கு சட்டத்தின் முன் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். எமது ஆட்சியில் மோசடியாளர்கள் தண்டிக்கப்படுவதுடன், கொள்ளையடிக்கப்பட்ட பணமும் மீளப்பெறப்படும் - என்றார். (ச-44)

## 6 பேர் தாவல்

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுவர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணைந்துள்ளனர் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. இது தொடர்பான ஒப்பந்தமொன்றும் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகின்றது. (ஒ-44)

## பொருளாதாரச் சுமைகள் மக்களின் மீது திணிப்பு

### ராஜித ஆதங்கம்

அரசியல் அனுபவமற்ற ஒருவரிடம் நாட்டை ஒப்படைத்ததனாலேயே நாடு வங்குரோத்து அடைந்து மக்கள் மீது பொருளாதாரச் சுமை திணிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு அரசியல் தேவையில்லை தீர்வே வேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

"நாட்டு மக்கள் தற்போது தேர்தலை எதிர்பார்க்கவில்லை. பொருளாதாரச் சுமைகள் குறைந்து நிம்மதியாக வாழக்கூடிய சூழ் நிலையை எதிர்பார்க்கின்றனர். அரசியல் மக்களுக்கு வெறுத்துள்ளது. அரசியல்வாதிகள் மீதும் நம்பிக்கையும் இல்லை" - என்றார். (ச-44)

## இறக்குமதி இறைச்சியில் வைரஸ்

சீனாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சியில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் கண்டறியப்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனை அரசு கால்நடை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எனினும், இறக்குமதி செய்யப்பட்ட குறித்த இறைச்சி சந்தைக்கு விடுவிக்கப்படவில்லை. (ச-இ)

## பொருளாதார நெருக்கடி; கல்வியில் பெருவீழ்ச்சி!

2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது 54.9% வீதமான மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலதிக சீருடைகளைக் கொள்வனவு செய்வதை 44 வீதமான பெற்றோர் நிறுத்தியுள்ளனர். கற்றல் உபகரணங்களுக்குச் செலவிடும் பணத்தை 53.2 வீதமான பெற்றோர் குறைத்துள்ளனர்.

பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்புவதை 40.6 வீதமான பெற்றோர் நிறுத்தியுள்ளனர்.

பொதுவாக கற்றல் செயற்பாடுகளுக்கான செலவுகளை 28.1 வீதமான பெற்றோர் குறைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

### நாளை

31.12.2023
ஞாயிற்றுக்கிழமை
மார்கழி 15

சுபநேரம் : 09.29 - 10.59
ராகுகாலம் : 04.59 - 06.29

### நாளொரு நல்வார்த்தை

ஒரு சிந்தனை நம்மை
நெருப்பை விட அதிக
சூடாக்கிவிடுகிறது.
– ஸ்டீபன் ஹாக்கிங் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய வரவு செலவுத்திட்டம் 2024

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பாகம் VI பிரிவு 168(1) இன் மூலம் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டம் 257/12.12.2023 ஆம் இலக்கத் தீர்மானம் (நிர்வாக கட்டளை) மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சோ. மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனிய வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.
12.12.2023

(CR 41412) S-1

## வலிகாமம் தெற்குபிரதேசசபை படவரைஞர்களை பதிவு செய்தல் - 2024

வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 05.12.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை படவரைஞர்களை பதிவு செய்தல் - 2024 விளம்பரத்திற்கு மேலதிகமாக. 31.01.2024 ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதீக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ள கால நீடிப்புச்செய்யப்பட்டுள்ளது என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தெற்குபிரதேசசபை,
சுன்னாகம். 021 224 0017 / 021 205 3001

# கிரிக்கெட் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம்

கொழும்பு, டிசெ. 30

பயிற்சியாளர் பதவிகளுக்கு இலங்கை கிரிக்கெட் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தேசிய அணியின் துடுப்பாட்டம், வேகப் பந்து வீச்சு, சுழற்பந்து வீச்சாளர்கள் மற்றும் களத்தடுப்பு உள்ளிட்ட பிரிவுகளுக்கான பயிற்சியாளர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதேவேளை இலங்கை அணியின் பந்துவீச்சு பயிற்சி யாளர் பதவிக்கு இலங்கை அணியின் முன்னாள் வீரர்ஜீவன் மெண்டிஸ்விண்ணப்பித்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## உரிமையாளர் மாற்றம்

கோண்டாவில் ஸ்ரேசனடி இரண்டாம் (2) இலக்க கடையில் இங்கிய உரிமையாளர்

**நல்லையா உதயகுமார்**

[பெரியதம்பி]



ஆட்டிறைச்சி கடை கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சி கடைக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்

**ஆரம்பம்: 01.01.2024**

தொ.பே.: 077 085 6479

## தென்னம்பிள்ளை விற்பனைக்கு

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்களும் குறைந்த் காலத்தில் பயன்தரக்கூடிய நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

077 659 2044

## மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்களால் நடத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான 14 ஆவது முன்னோடிப் பரீட்சை 2023

### முன்னிலைப் பெறுபேறுகள்

Mora E Tamils

### PHYSICAL SCIENCE STREAM

| INDEX. NO | NAME | DISTRICT | MATHS | PHYSICS | CHEMISTRY | ISLAND RANK |
|---|---|---|---|---|---|---|
| 182928 | THUSHANTHAN PHILIP AMALARAHA | Jaffna | A | A | A | 1 |
| 183416 | VISNAVI JEGANATHAN | Jaffna | A | A | A | 2 |
| 183637 | KOSHIKA RAKUMAR | Jaffna | A | A | A | 3 |
| 127748 | DARSHAN VARUNIKA | Badulla | A | A | A | 4 |
| 131460 | PRASANNAH RAMESH | Batticaloa | A | A | A | 5 |
| 104397 | SEGARAN SIVAKUMARAN SEGARAN | Kilinochchi | A | A | A | 6 |
| 306314 | SUSEENTHIRAN ARULRAJ HARSHIYAN | Trincomalee | A | A | A | 7 |
| 182715 | SANJUTHAN YOGANANTHESWARASARMA | Jaffna | A | A | A | 8 |
| 131378 | NAAGUL NIRMALAN | Batticaloa | A | A | A | 9 |
| 183741 | AATHITHIYAN PATHMALINGAM | Jaffna | A | A | A | 10 |
| 131462 | MENUJANTH ANANTHANAYAHAM | Batticaloa | A | A | A | 11 |
| 182952 | SIVAKUMAR SAPAREESAN SIVAKUMAR | Jaffna | A | A | A | 12 |
| 182942 | KARUNAKARAN ABISHAN KARUNAKARAN | Jaffna | A | A | A | 13 |
| 183677 | ATHISHAYA JEEVAKARAN | Jaffna | B | A | A | 14 |
| 141863 | YENUMI GUNAWARDANA | Colombo | A | A | A | 15 |
| 183143 | ABOORVANATHA ARULTHASAN | Jaffna | A | A | A | 16 |
| 183076 | THARSAYAN THANARANJAN | Jaffna | A | A | A | 17 |
| 275213 | ARCHCHUTHAN SURESHKUMAR | Mullaitivu | A | A | A | 18 |
| 182839 | DINOJAN MATHIALAGAN | Jaffna | A | A | A | 19 |
| 183662 | KOVARTHTHANY SOKKANATHAN | Jaffna | A | A | A | 20 |

### BIOLOGICAL SCIENCE STREAM

| INDEX.NO | NAME | DISTRICT | BIO | PHYSICS | CHEMISTRY | ISLAND RANK |
|---|---|---|---|---|---|---|
| 183408 | SHIROMY SRISARAVANAPAVANANTHAN | Jaffna | A | A | A | 1 |
| 193894 | MOHAMED FAIZAR FATHIMA NIHLA | Kalutara | A | A | A | 2 |
| 183757 | ABHISHAKAR ANANDAJOTHY | Jaffna | A | A | A | 3 |
| 183374 | THARANKA KUGATHAS | Jaffna | A | A | A | 4 |
| 182970 | SAJEEVAN SIVANANTHAN | Jaffna | A | A | A | 5 |
| 141857 | SREEMAATHURI SINTHANAICHSELVAN | Colombo | A | A | A | 6 |
| 183182 | ABISHEN ANANDASAYANAN | Jaffna | A | A | A | 7 |
| 183748 | JEEVITHAN VASEEKARAN | Jaffna | A | A | A | 8 |
| 141635 | NIPUN ADIKARI | Gampaha | A | A | A | 9 |
| 183013 | THIVANAN SUBASKARAN | Jaffna | A | A | A | 10 |
| 182834 | SAGANAN CHANDIRATHAS | Jaffna | A | A | A | 11 |
| 183034 | KUKESHAN THAMILCHELVAN | Jaffna | A | A | A | 12 |
| 183162 | SINTHUJAN KAJENTHIRAN | Jaffna | A | A | A | 13 |
| 183802 | KOSUKI SKANTHARAJAH | Jaffna | A | A | A | 14 |
| 183150 | SAJATHTHAN BALAHARAN | Jaffna | A | A | A | 15 |
| 183192 | TARUJAN RAJENTHIRAKUMAR | Jaffna | A | A | A | 16 |
| 306303 | SRITHARAN SIRAKSHAN | Trincomalee | A | A | A | 17 |
| 315822 | THIBIKA GANESH | Vavuniya | A | A | A | 18 |
| 244995 | CHRISHERA XAVIER | Mannar | A | A | A | 19 |
| 295498 | MOHAMED NAFFLI ABDUL KALAM | Puttalam | A | A | A | 20 |


Northway Family Mart

moraetamils.com
moraetamils@gmail.com

உதயன்

# மரண அறிவித்தல்

# வல்லிபுரம் கந்தையா



அன்னை மடியில்
28.03.1931

ஆண்டவன் அடியில்
27.12.2023

கௌரீசர்மடம் திருக்கேதீஸ்வரம் உரிமையாளரும் யாழ். சாவகச்சேரி யைப் பிறப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தையா அவர்கள் கடந்த (27.12.2023) அன்று (மெல்பேன்) அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமு வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வரும், அருணாசலம் சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மாணிக்கம் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ் சென்ற தாமோதரம்பிள்ளை, தையல்நாயகம், கணேசு, பொன்னம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற புவனேந்திரகிரி (சுவிஸ்), லலிதாம்பிகை (அவுஸ்ரேலியா), ஜெகதாம்பிகை (பிரான்ஸ்), கௌரீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு, ஜரின், காலஞ்சென்ற நிறைஞ்சன்குமார், ஜெகதீஸ்வரன் மற்றும் நித்தியகௌரி ஆகியோரின் பாசமிகு மாமனும், கிரிஷான், பிரியான், மிதுலா, லஷ்மன், லவன், குசன், கோசலா, நீலானி, சிந்துயா, யாழினி, ஜனனி, சுபானி ஆகியோரின் அன்புப் பேரனும், அசானியா, சியானா சஞ்சை, லெயானா, அருண், சுயன் கிஷான் ஆகியோரின் அருமைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.01.2024) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியில் இருந்து 12.00 மணிவரை நடைபெற்று, 12.15 மணியளவில் Boyd Chapel, 600 Princes Highway, Springvale, Victoria 3171 Australia என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| திருநாவுக்கரசு | - | + 61 413 338 996 |
| லலிதா | - | + 61 468 424 336 |
| ஜெகதாம்பிகை | - | + 33 619 667 555 |
| கௌரீஸ்வரன் | - | + 47 997 083 91 |

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எந்திரன்' படப் பாணியில் குருவைத் தாக்கும் ரோபோ

'எந்திரன்' படத்தில் வரும் சிட்டியின் செயற்பாடுகள் போன்று அமெரிக்காவில் சில ரோபோக்கள் மனிதர்களைத் தாக்கிய சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக ஆங்கில ஊடகமான 'டெய்லி மெயில்' செய்தி வெளியிட்டுள்ளது.
எலான் மஸ்கின் 'டெஸ்லா' கார் ஆய்வு கூடங்களிலேயே இந்தச் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகின்றன.
2021 ஆம் ஆண்டில் கணினி பொறியியலாளர் ஒருவர் செயலிழந்த இரண்டு ரோபோக்களின் அருகே கார் உதிரிப்பாகங்களைப் பிரித்தெடுத் துக்கொண்டிருந்த வேளையில் அதிலொரு ரோபோ திடீரென அவரை மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளது.
அதேபோன்று பிறிதொரு சம்பவத்தில் அவசர பொத்தானை அழுத்தும் வரை ரோபோ ஒன்று பொறியியலாளர் ஒருவரை மல்யுத்த வீரனைப்போல் தாக்கியுள்ளது.
புலனாய்வு ஊடகவியலாளர்களின் தகவல்களின் படி 2018 ஆம் ஆண்டு டெஸ்லா நிறுவனத்தில் கடமையாற்றிய 36 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)



சட்டஅறிஞரும் பருத்தித்துறை நகரசபை முன்னாள் தலைவருமான அமரர் மயில்வாகனம் வேலும்மயிலும் 100 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-100)

# உதயவாழ்வு வேலைத்திட்டம்
## சரவணபவனால் ஆரம்பித்துவைப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 30
இளம்பெண்களுக்கான இலவச தொழிற்பயிற்சி வகுப்புகள் உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவனால் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
இளம்பெண்களிடையே சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக உதயன் பத்திரிகையின் சேவைகளை முன்னெடுக்கும் உதயவாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இலவச தொழிற்பயிற்சி செயற்றிட்டம் 14 ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
தையல், அழகுக்கலை, ஆரிவேக், கேக் ஐசிங் ஆகிய ஆறு மாதகால தொழிற்பயிற்சி வகுப்புகளே இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஜெயந்தன், உதயவாழ்வு தையல் பயிற்சி ஆசிரியை அமராவதி உட்படப் பலர் பங்கேற்றனர். (ஓ.125)

## கொரோனாத் தொற்றால் மேலும் ஒருவர் இறப்பு!

கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கையில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மதவாச்சியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். இலங்கையில் இவ்வாரம் மேலும் இருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

## மரண அறிவித்தல்



பிறப்பு: 11.04.1938 — இறப்பு: 27.12.2023

### திருமதி கனகரத்தினம் கனகமணி


உடுவில் காளிகோயிலடியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் கனகமணி அவர்கள் கடந்த (27.12.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - மாரிமுத்து தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவமலர் அவர்களின் பாசமிகு சகோதரியும், சௌந்தரராஜன், சாரதாதேவி, காலஞ்சென்றவர்களான தயாபரன், சுந்தரராஜன் மற்றும் ஜெயலட்சுமி, சாந்தி, லோகேஸ்வரி, முரளிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகேஸ்வரி, தவராஜா, பொன்ராசா, பகீரதன், அச்சுதமேனன் மற்றும் காலஞ்சென்றவரான அனுஷியா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜா, நிரோஜன் (டோகா), நிதர்சினி, பானுரேகா (லண்டன்), சுபாங்கினி (நோர்வே), ஹேமலதா, சங்கீதா, துவாரகா (கனடா), தாரகை, சரண்ராஜ், மயூப்ரஷாத் (சுவிட்ஸர்லாந்து), லேக்கா, பேபி சந்துரு, அரவிந்த், கோபிசங்கர், சதீசனா (அண்ணாமலை பல்கலைக்கழகம் - சிதம்பரம்), மதுசனா, கிறிஸ்ரிக்கா, டனுஷன், விஷ்ணுதரன், செந்தூரன், பிரதீஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பௌநாத், கிரிஷ்நாத், ஆருண்யன், சஸ்வித், ஆயுஷன், அதர்ஷன், ஜஷ்ணு ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சௌந்தரராஜன் - 077 107 8471
முரளிதரன் - 076 906 8967

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 10 . 1928



உதிர்வு 29 . 12 . 2023

### நல்லதம்பி தாமோதரம்பிள்ளை

(அரசடி டச்சு றோட், அளவெட்டி மேற்கு, அளவெட்டி)

அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தாமோதரம்பிள்ளை நேற்று (29.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, தெய்வானைப்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அண்ணனும், நாகரத்தினம், நாகபூசணி, நாகலோசனி, புஷ்பலோசனி, முருகதாஸ், சிவதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி, மகேஸ்வரன் (ஆயுள்வேத வைத்தியர்), தவச்செல்வம் (ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்), மன்மதராஜன், ரதி, சுஜீவா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகரன் - சமிகா, கயானா - இரதீஸ்காந், நீலாகரன்- இருசா, துஷ்யந்தி - சத்தியதீபன், தர்சிகா - ரமேஷ், ததுர்சனி - பவனீதரன், அயந்தன்- சுகந்தினி, தேனுகா - அருணன், கௌரிசங்கர், ஜஸ்மினி, விசாலினி, பிரவின், அஜய், நிருஜா, கிருஜா, ஸ்ரீராம், வினேஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், கனியா, லிசாந், திரேஷ், ஷக்சனா, பிரித்திகன், ஹர்சனா, திஸ்வின், காவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.01.2024 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 . 11 . 1954

உதிர்வு 10 . 01 . 2023



## அமரர் புஸ்பராணி சிறிஸ்கந்தராசா

ஆண்டொன்று அகன்றாலும் அன்னையே
உங்கள் அன்பின் அரவணைப்பு
எம்மனத்துள் என்றென்றும் விட்டகலாது
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
மீளாத்துயரில் மூழ்கிடும் உங்கள்
நினைவுகளும் சிந்தனைகளும்
எம்மனத்தே என்றென்றும் நிலைத்திருக்கும்
எமது ஈரவிழி நீரால் உம்பாத மலர் இறைஞ்சுகின்றோம்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
077 252 1578


(cs 53324) (N.1)

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 02 . 1947

மறைவு 16 . 12 . 2008



## அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)

(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், உரிமையாளர் அக்ரோ இயந்திரவியல் தொழிலகம், மல்லாகம், கோண்டாவில்)

மக்கள் சேவையே மகேசன் சேவை எனக்கருதி, சேவைகள் பல புரிந்து, செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்து தன் தொழிலில் சாதனையாளனாய், எம்மை எல்லாம் வாழவைத்த தெய்வமாக, வாழ்ந்து காட்டி வழிநடத்திச் சென்றீர்களே ஆண்டுகள் பதினைந்து ஆனதப்பா - ஆறவில்லை உங்கள் நினைவுகள்!


(CS 27504) S-1

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1971

மறைவு 30 . 12 . 2020



## அமரர் வை.சிவஜோதி

(நிர்வாக இயக்குநர்,
Little Aid நிறுவனம், கிளிநொச்சி)

அன்புள்ள நண்பா - நீ
எங்கள் சிவஜோதி
உன் நினைவு நாளில்
நினைவுகளின்
சிலவரிகள் - இங்கே
உனக்காக

பிறப்பின் பயணம்
முடியும் முன்பே
சாதிக்கும் வயதில்
பாதியிலே சென்று விட்டாய்
காலங்கள் விரைந்து
வருடங்கள் நகர்ந்தாலும்
உன் நினைவுகள்
என்றும் உயிர்வாழும்

நண்பனாய் தோள் கொடுத்து
நண்பர்களை
தேடி வைத்தாய்
எமக்காக நீ நின்று
தைரியமும் தந்தாய்
உன்னோடு
கூடிமகிழ்ந்த நினைவுகள்
பொக்கிஷமாய்
எம் மனத்தில்
மீண்டும் மீண்டும்
வந்து செல்ல
உன் நிழல் தேடி நிற்கின்றோம்.


நண்பா
உனது இழப்பின் பாதிப்பு
உணர்வுகளை உரச
மீளும் வழி தெரியாமல்
விடை தேடி நிற்கின்றோம்
உனக்காக
கண்ணீர் மலர் தூவி
அஞ்சலி செலுத்துகின்றோம்.

நண்பர்கள்
Faculty of Engineering Technology (92-95).
The Open University of Sri Lanka,
Nawala, Nugegoda.

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 03 1941

மறைவு 28 12 2023



## திரு.சிவபாதசுந்தரம் சுந்தரேசன்

(Bsc, Dip.in.Education)
(முன்னாள் ஆசிரியர் St.Henry's College,
விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

கொழும்பைப் பிறப்பிடமாகவும், வியாபாரிமூலையைப் பூர்வீகமாகவும், தலையாழி கொக்குவில், வெள்ளவத்தை ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் சுந்தரேசன் அவர்கள் **28.12.2023** வியாழக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்பிள்ளை சிவபாதசுந்தரம் (Hospital Secretary), இரத்தினநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், பரம்சோதி மாஸ்டர், செல்வரத்தினம் (தலையாழி) ஆகியோரின் அன்பு மருமகனும், பத்மஜோதி (முன்னாள் முகாமையாளர் இலங்கை வங்கி யாழ்ப்பாணம் - கொழும்பு) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சோமபாலன், Dr.வசந்தநாதன் (முன்னாள் Director of Health Service) இன் இளைய சகோதரரும், பத்மதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அருட்பதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), Dr.உமாதேவி,(முன்னாள் Director Estate & Urban Health) ன் மூத்த சகோதரரும் ஆவார்.சிவகிருபா ,Dr.தவநாதன்,யோகநாதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) இன் சித்தப்பாவும், தர்சன், தர்சினியின் பெரியப்பாவும், அருணபிரபு (Accountant), சீரோன், லக்சன், சங்கவி. சியாமி ஆகியோரின் மாமாவும், புவனேஸ்வரி, மனோன்மணி,சிவானந்தஜோதி,இரட்ணஜோதி,ஜெயஜோதி,உருத்திரஜோதி, குணஜோதி, பிரமஜோதி, விமலதேவன், சுகிர்தா, சுசிலா ஆகியோரின் மைத்துனரும், அபூர்வனின் பேரனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல் – மனைவி திருமதி. சுந்தரேசன் – 0775581423**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 150 விமானங்களைப் பயன்படுத்தி

# உக்ரைன் மீது ரஷ்யா நேற்று மூர்க்கத்தாக்குதல்



ட்ரோன்கள் உட்பட சுமார் 150 விமானங்களைப் பயன்படுத்தி உக்ரைன் மீது ரஷ்யா நேற்று மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்றுவரும் இந்தப் போரில் உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய மிகப்பெரும் வான்தாக்குதல் இது என்று உக்ரைன் இராணுவத்தினர் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக போர் அறிவிப்புச் செய்த ரஷ்யா உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கைகளை தரைவழியாகவும், ஆகாய மார்க்கமாகவும் ஆரம்பித்தது. நேட்டோ நாடுகளும் அமெரிக்காவும் உக்ரைனுக்கு இராணுவ உதவிகள் பலவற்றை வழங்கி வருகின்றன. இதனால், உக்ரைனும் ரஷ்யாவுக்கு எதிராகத் தாக்குப்பிடித்துப் போராடுகின்றது.

கடந்த சில வாரங்களாக இரு நாடுகளுக்கும் இடையிலான போர் ஆகப்பெரும் ஆபத்தான நிலையில் செல்லவில்லை. இரு தரப்பும் பரஸ்பரம் சிறு தாக்குதல்களை இடையிடையே மேற்கொண்டன. இந்த நிலையில், எவரும் எதிர்பாராத விதமாக, உக்ரைன் நினைத்துப்பார்க்க முடியாத நேரத்தில் உக்ரைன் மீது ட்ரோன்கள் உட்பட சுமார் 150 விமானங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியுள்ளது ரஷ்யா.

உக்ரைனின் தலைநகரான கீவ் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. 'எதிரி மிக வலுவாகத் தாக்கியுள்ளான்' என்று உக்ரைனின் இராணுவ அதிகாரியொருவர் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (ம)

### சுண்ணக்கல் அகழ்வுக்கெதிராக

## போராட்டம் தொடர்வதால் உதவித்திட்டங்கள் மறுப்பு

சுண்ணக்கல் அகழ்வுக்கெதிராகப் போராட்டம் நடத்துவதனூடாகவே கிளிநொச்சியில் ஐந்து கிராமங்களுக் கான நிவாரணத் திட்டங்கள் மறுக்கப்படுகின்றன என்று மக்கள் ஒன்றியத் தலைவர் வல்லிபுரம் சிறிபாஸ்கரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

"கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி போன்ற கிராமங்களுக்கான போக்குவரத்துகள் வெள்ள இடரால் துண்டிக்கப்பட் டுள்ளபோதிலும் வெள்ள இடர் நிவாரணங்கள் கிடைக்கப்பெறவில்லை. எமது பிரதேசத்தில் மருத்துவர்கள் நெருக்கடி, அம்புலன்ஸ் இன்மை, பாடசாலைகளில் வளநெருக்கடி, வீதிப் புனரமைப்புகள் எனப் பல குறை பாடுகள் நிலவுகின்றபோதும் அவற்றுக்குத் தீர்வு கிடைக்கவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-13)

## இலங்கையருகே நில அதிர்வுகள்!

இலங்கைக்கு அருகில் இரண்டு நிலஅதிர்வுகள் நேற்றுக் காலை பதிவாகியுள்ளன.


மாலைதீவுக் கடலின் அடியில் 4.8 மற்றும் 5.8 ரிச்டர் அளவில் இந்த நிலஅதிர்வுகள் பதிவாகின.

இதனால் இலங்கைக்கு சுனாமி ஆபத்து இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# மணிவிழா வாழ்த்துக்கள் -30.12.2023

Best Wishes

ஆசிரிய சேவையில் 27.11.1989 தொடக்கம் 30.12.2023 வரை 34 வருடங்களாக அர்ப்பணிப்போடு பணியாற்றி இன்று 60 வயதினை பூர்த்தி செய்யும் அதிபர்



## திருவாளர். வீரவாகு ஓங்காரலிங்கம்

(அதிபர் - நயினாதீவு மகா வித்தியாலயம்) SLPS-I

ஓய்வுகாலம் வளங்கள் நலன்கள் நிறைந்ததாய் அமைய எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாளை வேண்டி பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்:-**

1. யா/புங்குடுதீவு மேற்கு A.M.T.M. - உதவி ஆசிரியர் - 27.11.1989 - 13.03.1992
2. யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம். உதவி ஆசிரியர் - 14.03.1992-30.04.1992
3. யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம் - உதவி ஆசிரியர் - 01.05.1992 - 31.01.1993
4. கொட்டகல T.T.கல்லூரி - உதவி ஆசிரியர் - 01.02.1993 - 31.01.1995
5. யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் S.L.T.S (3-1) - 01.02.1995 - 30.04.1995
6. யா/அனலைதீவு தெற்கு G.T.M.S. - Pre-Principal- 01.05.1995 - 03.08.2000
7. யா/அனலைதீவு தெற்கு SLPS-3. 04.08.2000 - 11.05.2004
8. யா/அனலைதீவு சதாசிவம் ம.வி. SLPS-3. 12.05.2004 - 31.12.2006
9. யா/அனலைதீவு சதாசிவம் ம.வி. SLPS-2 II. 01.01.2007 - 15.12.2010
10. யா/அனலைதீவு சதாசிவம் ம.வி. SLPS-I. 16.12.2010 - 26.01.2012
11. யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஸ்ட வித். SLPS-I. 27.01.2012 - 20.09.2015
12. யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம். SLPS-I. 21.09.2015 - 11.03.2018
13. யா/நயினாதீவு மகா வித்தியாலயம். SLPS-I. 12.03.2018 - 30.12.2023

Best Wishes

**வாழ்த்துவோர்:**

**நயினைவாழ் உறவுகள்.**

(CR 41415)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சார் பாரம்பரியமே

# தலைவர் பிரபாகரனுக்கு பேராண்மையைப் பெற்றுத் தந்தது

## கடற்கோள் நினைவுநாளில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 30

கடல் வாழ்க்கை, நில வாழ்க்கையைவிடச் சவால்கள் நிறைந்தது. கடலில் போனால் திரும்பி வருவோமா என்று தெரியாத நிச்சயமற்ற வாழ்க்கை உயிர் பயத்தை அறவே இல்லாததாக்கியது. இக்கடல்சார் பாரம்பரிய குணவியல்புகளுடன் இலட்சிய உறுதியும் சேர்ந்து தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தது. அவரால் கடலையும் நிலத்தையும் குறிப்பிட்ட காலம் வரையிலேனும் கட்டிக்காக்க முடிந்தது. இன்று அவர் இல்லாத நிலையில் சூறையாடப் ப டும் கடலைப் பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு நெய்தல் நில மக்களிடமே உள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை மாதகல் விநாயகர் இறங்குதுறையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூமியின் காலநிலையில் நிலத்தைவிட கடல் ஆற்றுகின்ற பங்களிப்புப் பெரியது. பூமியின் மீது சூரியனில் இருந்து விழுகின்ற வெப்பத்தின் பெரும் பகுதியைக் கடல்தான் உறிஞ்சிவைத்திருக்கிறது. உறிஞ்சிய வெப்பத்தைச் சமுத்திர நீரோட்டங்களின் மூலம் பூமி முழுவதும் சமனாகப் பரவச்செய்கிறது. பூமியைச் சூடுபடுத்தும் கரியமில வாயுவைத் தன்னுள் ஈர்த்துக் கரைத்துவைத்திருக்கும் மிகப்பெரும் காபன் தொட்டியாகச் செயலாற்றுகிறது. கடல்தான் பூமியின் சூட்டைத் தணிவிக்கும் மழை பொழிவதற்குக் காரணமாகவும் உள்ளது. ஆனால், கடலின் இருப்பும் உயிர்ப்பும் தான் எமது இருப்பும் உயிர்ப்பும் என்று தெரியாத நாம் கடலை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம். எமது பொருத்தமற்ற மீன்பிடி முறைகளாலும் அளவுக்கு அதிகமான மீன்பிடியாலும், கடலட்டை வளர்ப்புப் போன்ற ஒற்றையினப் பண்ணைகளாலும் கடலில் மீன் இனங்கள் அழிந்து வருகின்றன. இன்று கடலில் மீன்களை விடப் பிளாஸ்ரிக் துகள்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

கடலில் அதிக அளவில் பிளாஸ்ரிக்கைத் தள்ளிக் கொண்டிருக்கின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளது. கடலை எமது கழிவுகளைக் குவிக்கின்ற ஒரு குப்பைத் தொட்டியாகவே நாம் பாவித்துக்கொண்டிருக்கின்றோம்.

கடலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்து மக்களுக்கும் உண்டு. ஆனாலும் கடலின் பங்காளிகளான, கடலையே வாழ்வாதாரமாகக் கொண்ட கடற்றொழிலாளர்களுக்கு இந்தக் கடப்பாடு அதிகமாகவே இருக்கிறது.

அதற்கான பட்டறிவும், பராக்கிரமமும் இவர்களிடம் தான் அதிகளவில் இருக்கிறது. கடற்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அவசரப் பணியாக விரைந்து மேற்கொள்வதே பூமியில் எமது இருப்புக்கான உத்தரவாதமாக அமையும். இதுவே, கடற்கோளில் பலியான எம் உறவுகளுக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலியாகவும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ஒ-27)

## விஜயகாந்துக்கு யாழில் அஞ்சலி

யாழ்., டிசெ. 30

புரட்சிக் கலைஞர் விஜயகாந்தின் மறைவையொட்டி கல்வியங்காடு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அஞ்சலிநிகழ்வு நடத்தப்பட்டது.


கல்வியங்காடுசந்தை வளாகத்தில் அவரது ரசிகர்களால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ச-17)

## பயிரழிவு விவரம்; பதிவுகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள கிராமங்களில் மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான விவசாயச் செய்கை மற்றும் உபஉணவுச் செய்கைகளின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அந்தப் பகுதி விவசாயிகள் கொட்டும் மழையிலும் நீண்ட வரிசையில் காத்திருந்து பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-500)




## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1949



மறைவு 24 . 12 . 2023

**திருமதி செல்லத்துரை சச்சிதானந்ததேவி**

**(முன்னாள் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்)**

இல.10, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அத்தியடி, மணியந்தோட்டம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் நல்லூர் பிரதேசசபை உறுப்பினரான திருமதி செ.சச்சிதானந்ததேவி அவர்கள் கடந்த (24.12.2023) யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை (சாத்திரியார்) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கீதபொன்கலன் மற்றும் புவனேஸ்வரி, சண்முகானந்தராஜா (டென்மார்க்) சந்திரராஜேஸ்வரி (லண்டன்), பிரேமராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வானந் (கனடா), காயத்திரி (டென்மார்க்), விஜயகௌரி (லண்டன்), அபிராமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராகுலனின் பாசமிகு சித்தியும், விஜிதா (கனடா), சுதர்சன் (டென்மார்க்), Dr.சுதர்சனன் (லண்டன்), கண்ணதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஜெயராஜசிங்கம், ஜெபமணி, ராஜகோபால் மற்றும் நளினிதேவி (டென்மார்க்), ஜோண்சன் (லண்டன்), ஈஸ்வரகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரிஷா, கரிஷா, சாயிஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், சாய்ராமின் (டென்மார்க்) பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.10, அத்தியடி புது வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (31.12.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**தொலைபேசி இல:**
**செல்வானந் - 001 647 989 6025**
**காயத்திரி - 4560484997**
**விஜயகௌரி - 447944425349**
**அபிராமி - 0447548273291**
**சண்முகானந்தராஜா - 4540155951**
**புவனேஸ்வரி - 021 222 7886**
**இராகுலன் - 077 720 4069**
**அபிராமி - 44790785561**

**தகவல்: குடும்பத்தினர்.**


(CS 27503) A-1

## மரண அறிவித்தல்

**இளையதம்பி அரியநாயகம் (ரவி)**

தோற்றம் 04.03.1955

மறைவு 29.12.2023



மாவை கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலடி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி அரியநாயகம் (ரவி) நேற்று (29.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், கணபதி சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவி (தவா) யின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 900 9440**
**077 621 5377**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 27513) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயமலைப் பிரகடனம் தமிழர்களை வஞ்சிக்கும்

## பிரம்டன் நகர மேயர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

உலகத் தமிழர் பேரவையும், கனேடியத் தமிழ் காங்கிரஸும் இணைந்து இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொண்டுள்ள 'இமயமலைப் பிரகடனம்' தமிழர் களுக்கு எதிராக இனவழிப்புப் போரில் ஈடுபட்டவர்களைக் காப்பாற்றும் செயல் என்று கனடாவின் பிரம்டன் நகர மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்கள் தப்பியோடிவந்துள்ளனர். 2009 இல் இனப்படுகொலை உச்சக்கட்டத்தை அடைந்த காலம் முதல் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரமான குற்றங்களுக்காக நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன். இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமல் அமைதியும் சமாதானமும் ஏற்படுவதற்குச் சாத்தியமில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு எதிரான ஆதாரங்களைச் சேகரித்து வருவதுடன், போர்க் குற்றவாளிகளுக்கு எதிரான விசாரணைகள் உள்ளிட்ட சாத்தியமான மூலோபாயங்களை முன்வைக்கவுள்ளது. கனடாவின் பிரம்டன் நகரமும் கனடாவின் அனைத்து நிர்வாகங்களும் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளானார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

எனினும் உலகத்தமிழர் பேரவை, கனேடியத் தமிழ்க் காங்கிரஸின் ஆலோசனைக்குழுவின் உறுப்பினர் ஒருவருடன் இணைந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை குறைமதிப்புக்கு உட்படுத்தும் விதமான இலங்கையின் போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றும் யோசனையொன்றைச் சமர்ப்பித்துள்ளனர். இது நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்ற இலக்கில் பின்னோக்கிய நடவடிக்கையாகும். தமிழ் மக்களுக்கு எதிரான மிகமோசமான குற்றங்களுக்காகக் கனடாவில் தடைசெய்யப்பட்டுள்ள போர்க் குற்றவாளியும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவுடன் கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் படமெடுத்துக்கொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

உலகத்தமிழர் பேரவை மற்றும் கனேடியத் தமிழ்க் காங்கிரஸின் இந்த நடவடிக்கைகளை நான் கடுமையாகக் கண்டிக்கின்றேன் - என்றார். (அ-ம)

# சஜித் மட்டுமே பொதுவேட்பாளர்

பிரதான எதிர்க்கட்சி தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணியின் பொதுவேட்பாளர் சஜித் பிரேமதாஸதான். இதில் மாற்றுக் கருத்து கிடையாது என்று ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தயாசிறி ஜயசேகர ஆகியோர் தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இவ்வாறு கூறினார்.

'பொதுவேட்பாளராகப் போட்டியிடும் ஆசை அரசியல்வாதிகளுக்கு இருக்கலாம். எனக்கும் அந்த ஆசை உள்ளது. எனினும், அது யதார்த்தபூர்வமானதாக இருக்கவேண்டும். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதிக்கான பொது வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான். இதில் மாற்றம் கிடையாது' - என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

# தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 30

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரிப்பாய் பகுதியில் இளைஞரொருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது பேரனார் வீட்டில் தூக்கிட்ட நிலையிலிருந்து அந்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பாரப்படுத்தப்பட்டது. பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்த இளைஞர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இறப்பு விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-23)

## வற்வரி...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்பட்டால் நிச்சயம் வெதுப்பக மூலப்பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும். இவ்வாறு மூலப்பொருள்கள் அதிகரித்தால் அதன் தாக்கம் பொதுமக்கள் மீதே விழும். கொழும்பு உள்ளிட்ட இடங்களில் இப்போழுதே வெதுப்பகப் பொருள்களின் விலைகள் உயரத் தொடங்கிவிட்டன. வற்வரி அதிகரித்தால் யாழ்ப்பாணத்திலும் அதேநிலை ஏற்படும். ஆனால், இயலுமானவரையில் பாணின் விலையை அதிகரிக்காதிருக்கவேண்டும். ஏனெனில் பாண்தான் தற்போது இலங்கையர்கள் பலரின் உணவாக அமைந்துள்ளது. அதன் விலையும் அதிகரிக்கும் பட்சத்தில் நலிந்தவர்களால் வாழமுடியாது - என்றார். (அ-ம-23)

## கட்டுப்பாடுகளைத்...

யாழ்ப்பாணத்துக்கு உடனடியாகவே போதியளவு மருந்துகளை அனுப்பிவைக்கப்படவுள்ளதால் இன்றிலிருந்து புகைவிசிறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாணப் பிரதம செயலர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜனவரி 4ஆம் திகதி கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. வடக்கில் 145 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன. இதனால் பரீட்சை நிலையச் சூழலில் புகைவிசிறுவதற்கான பணிப்புரையும் நேற்றைய கூட்டத்தில் விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயலணியால், டெங்குக் கொத்தணி அடையாளப்படுத்தப்பட்டால் மாத்திரமே புகைவிசிறும் செயற்பாடு முன்னெடுக்கப்படவேண்டும் எனச் சுற்றறிக்கை ஊடாகப் பணிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று டெங்குக் குடம்பிகள் காணப்படுமாக இருந்தால் அந்தப் பகுதியில் புகைவிசிறுவதால் எந்தப் பயனும் இல்லை என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் டெங்குத் தொற்றாளர்கள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் ஆபத்து அதிகமுள்ள அனைத்துச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை பிரதேசங்களிலும் புகைவிசிறும் செயற்பாட்டை உடனடியாக ஆரம்பிக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான மருந்துகளை வழங்கவும் நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ-ம-ஒ-5)

## 2013ஆம்...

71 இலட்சத்து 83 ஆயிரத்து 503 ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்துத்தெரிவித்த, கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுதாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிப்பதற்கு எதிராக சுமார் 215 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 503 மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 71 இலட்சத்து 83 ஆயிரத்து 503 ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 27 இந்திய இழுவைமடிப் படகுகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் 11 படகுகள் அரசுடைமையாக்கப்பட்டன. ஒருபடகு விடுவிக்கப்பட்டுள்ளது. ஏனைய படகுகளுக்கு எதிராக வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

175 இந்திய மீனவர்கள் இவ்வருடம் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர்களில் 142 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 33 பேர் விடுவிக்கப்படவில்லை. இவர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட 12 வழக்குகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. 15 வழக்குகள் நிலுவையில் உள்ளன - என்றார். (அ-ம-125)

## உயர்தர...

களை மேற்கொள்ளவும் நேற்று நள்ளிரவுமுதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஜனவரி 4ஆம் திகதி முதல் ஜனவரி 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பாடசாலை...

அதிகரிக்கும்போது நாங்களும் எமது கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அது மட்டுமன்றி போக்குவரத்துப் பிரச்சினையால் வாகனங்களின் பாகங்களின் விலைகளும் அதிகரிக்கும். இவ்வாறான நெருக்கடியான நிலையில் பாடசாலைகளுக்கான போக்குவரத்தை வழமையான கட்டண அறவிடலுடன் செயற்படுத்தமுடியாது. எமக்கு மானிய விலையில் டீசல் வழங்கப்படுமிடத்து எம்மால் தொடர்ந்து வழமையான குறைந்த விலையில் பணியாற்றக் கூடியதாகவிருக்கும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ம-27)

## மூன்று...

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மூன்று துறைமுகங்கள் ஊடான பயணப்பாடுகள் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகமும், உறவுகளும் மேம்படும். பொருளாதாரமும் பலப்படும். அத்துடன் இலங்கையின் பலாலி விமான நிலையத்தையும் துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்வதை இந்தியா தொடர்ந்தும் விரும்புகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-6)

## வடமராட்சியில்...

கேணிப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இறால் பிடிப்புத் தொடர்பில் இருந்த கருத்து முரண்பாடுகளால் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ-ம-27)

## ஐ.எம்.எப். திட்டம்...

ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை தன் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமானால், கடன் நிவாரணம் மற்றும் சர்வதேச உதவிகளைப் பெறுவது காலத்தேவையானது. ஆதலால், இலங்கையில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை குறைந்தது அடுத்த நான்கு வருடங்களுக்குத் தொடரவேண்டும். மாறாக ஒப்பந்தத்தில் இருந்து விலகுவது நாட்டின் பொருளாதாரத்தில் கடும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

## சாராய...

வனங்கள் தெரிவித்துள்ளன. அரைப் போத்தல் சாராயத்தின் விலை 50 ரூபாவாலும், கால் போத்தல் சாராயத்தின் விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது. (அ-ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கறிஞர் உலகக்கிண்ணம்; யாழ்ப்பாணத்திலிருந்தும் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 30

**சட்டத்தரணிகளுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் துடுப்பாட்டப் போட்டியில் இலங்கை அணி சார்பாக விளையாடுவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனிஷ்ட சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**



பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றும் 8 ஆவது சட்டத்தரணிகள் சர்வதேச உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி நேற்று இலங்கையில் ஆரம்பமாகி எதிர்வரும் 6ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இதில் இந்தியா, இங்கிலாந்து, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் கொமன்வெல்த் அணிகள் மோதவுள்ளன. (ச-100)

# தமிழின விடுதலையை நேசித்தவர் விஜயகாந்த்

## சிறீதரன் எம்.பி. அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ. 30

ஈழத்தமிழர்களையும், அவர்களது இனவிடுதலைப் போராட்டத்தையும் தத்தம் சுயங்களுக்காக நிலை நிறுத்தப் பயன்படுத்திக்கொண்ட தமிழகத் தலைவர்களில் முற்றிலும் மாறுபட்ட ஒருவராகத் தமிழின விடுதலைப் போராட்டத்தை ஆழ நேசித்தவர் விஜயகாந்த். இவ்வாறு விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்த அறிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

அதில் மேலும் உள்ளதாவது:

தன் கலைத்துவ வெளிப்பாட்டின் வழி, ஈழத்தமிழர் களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழகத்தில் பகிரங்கமாக நிதிதிரட்டிய அவரது தமிழ்த்தேசியப் பற்றுறுதியும், தீவிரத்தன்மையும் இன்றும் எம் இதயங்களைச் சிலிர்க்க வைக்கிறது.

மனிதம் நிறைந்த அந்த மனிதனின் - மாபெரும் கலைஞனின் மறைவுக்கு என் இறுதி அஞ்சலிகள். விஜயகாந்த் மறைவுச்செய்தி மனதைக் கனக்கச் செய்கிறது. - என்றுள்ளது. (ச-100)

# உடுப்பிட்டி மதுசாலை தீர்வு தன்னிடமில்லையாம்

## கைவிரிக்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 30

பொதுமக்களின் கடும் எதிர்ப்பை மீறி உடுப்பிட்டி இமையாணன் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலை உடனடியாக மூடப்பட வேண்டும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் சுட்டிக் காட்டினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, "அதனை மூடுவது தொடர்பில் உடுப்பிட்டியிலுள்ள சமூக அமைப்புகள், நீதிமன்றத்தை அணுகுவதே நல்லது" - என்றார். (ச-66)


**மணமகள் தேவை**

1991ல் பிறந்த இந்து கௌரவ (V) குலத்தைச் சேர்ந்த ஜேர்மனியில் (PR) வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (அச்சுவினி 3ம் பாதம்)

077 7789 266 / 076 1610 615

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

077 386 6250

**தேவை**

முறுகண்டியில் அமைந்துள்ள உணவகத்திற்கு, சமையல்காரர், சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர் போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

தொடர்பு: 077 3866 250


## மரண அறிவித்தல்



**திருமதி. சரஸ்வதி முத்துலிங்கம்**

தேவாலய வீதி. சாவகச்சேரியை பிறப்பிடமாகவும். கல்வியங்காடு. ஐக்கிய இராச்சியத்தை (uk) வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நாகம்மாவின் புதல்வியும். முத்துலிங்கம் அவர்களின் மனைவியுமான திருமதி. சரஸ்வதி முத்துலிங்கம் ( இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின். முன்னாள் பிரதம கணக்காளர் ) அவர்கள் (28.12.2023) அன்று ஐக்கிய இராச்சியத்தில் (uk) காலமானார். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கின்றோம்.

தகவல் : சகோதரன்
திரு, திருமதி - க.நந்தகுமார்
சாவகச்சேரி

CS 27508 J-1


**தளபாடம், Auto parts விற்பனைக்கு**

6 அடி நீளம், 4 அடி உயரம் கொண்ட கண்ணாடி Show case, கடை மர மேசை, மர அலுமாரி மற்றும் ஆட்டோ உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு : 076 189 8521

**றோயல் அக்கடமி**
**ROYAL ACADEMY**

நாவலர் றோட், நல்லூர் | அரசடி றோட், யாழ்நகர்

**புதிய கல்வியாண்டு -2024**

தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium

ஆரம்பம் 01.01.2024 திங்கட்கிழமை

- கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம் ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரிய வாய்ப்பு!

யாழ் றோயல் காலை 7 மணி
நல்லூர் றோயல் காலை 9.30 மணி

குறிப்பு: * மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்.
* ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.
— இயக்குநர்

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) எம்மிடம் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்



**ஆர்க் . என் . கம்பனி**



150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

**MATHEMATICS**
**(ENGLISH MEDIUM)**

**ONLINE CLASSES FOR**
**Gr - 8,9,10 and 11 - 2024**

By. S.MURALI
Tutorial Staff Royal College - Colombo - 07

Contact No. 0773 557 447

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி**



* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.